# 6 எளியாரும் வலியாரும்

அது ஒரு காடு. அங்கு செல்பவர்கள் யானைகளின் கூட்டத்தைக் காணலாம். தலைவன் யானை அழகான தந்தங்களையும் கூர்மையான கண்களையும் பெற்று நல்ல கம்பீரமான தோற்றத்துடன் இருந்தது. தன்னுடன் வாழும் மற்ற யானைகளிடம் அன்புடனும், அக்கறையுடனும் இருந்தது.



ஒரு சமயம் நாட்டில் பருவமழை தவறியது. குளங்களும், ஆறுகளும் தண்ணீர் இன்றி வரண்டு விட்டன. பறவைகளும் மிருகங்களும் தாகத்தால் மடிந்து போயின. வேறு சில மிருகங்களும் பறவைகளும் தண்ணீர் இருக்கும் இடத்தைத் தேடி அலைந்தன.

காட்டில் வாழ்ந்துகொண்டிருந்த யானைகளும் தண்ணீர் கிடைக்காமையால் தாகத்தால் துன்புற்றன. இதே நிலைமை நீடித்தால் தாகத்தால் யானைகள் அனைத்தும் இறந்துவிடும் என்று தலைவன் யானை எண்ணியது. அதனால் விரைவில் தண்ணீர் இருக்கும் இடம் நோக்கிச் செல்லத் தீர்மானித்தது.

யானைகளை அழைத்துப் பல திசைகளிலும் சென்று குளம், ஆறு ஏதாவது காணப்படுகிறதாவெனத் தேடிப் பார்க்கும்படி சொல்லியது.

அவ்வாறு தேடிப் போன யானைகள் திரும்பி வந்து வெகுதூரத்தில் மற்றொரு காடு இருப்பதாகவும், அங்கு நிறையத் தண்ணீருடன் ஓர் ஏரி இருப்பதாகவும் கூறின.

தலைவன் யானை மிகுந்த மகிழ்ச்சியடைந்து யானைகளைக் கூப்பிட்டுத் தண்ணீர் இருக்கும் காட்டிற்குச் செல்லுமாறு கூறியது.

காட்டில் இருந்த ஏரி மிகவும் அழகாக இருந்தது. அதன் ஒரு கரையில் நிறைய முயல்கள் வசித்து வந்தன.

காட்டை அடைந்த யானைகள் நீர் நிறைந்த ஏரியைக் கண்டு மகிழ்ச்சி அடைந்தன. ஏரியை நோக்கிச் சென்றன. அவ்வாறு அவை செல்லும்போது முயல்கள் வாழ்ந்து வந்த இடத்தைக் கடந்து சென்றன. அவைகளின் காலடியில் சிக்கிச் சில முயல்கள் இறந்தன. சில காயம்பட்டுத் துன்புற்றன.

தங்கள் இனம் தினந்தோறும் யானைகளின் செயலால் மடிந்து போவதைக் கண்ட முயல்கள் விரைவில் இதற்கு முடிவு காண வேண்டுமென நினைத்தன.

எல்லா முயல்களும் கூடி யோசனை செய்தும் வழி ஏதும் தெரியாமல் தவித்தன.

அப்போது ஒரு சிறிய முயல் மற்ற முயல்களைப் பார்த்து ‘‘நமது துன்பத்தைக் களைய நான் முயற்சி செய்கிறேன்’’ என்றது.

மற்ற முயல்கள் மகிழ்ச்சியுடன் அதை யானைத் தலைவனைக் கண்டு பேசுமாறு வழியனுப்பி வைத்தன.

யானைகள் இருக்குமிடத்தை அடைந்தது முயல்; பயத்தால் உடல் நடுங்கியது. பெரிய யானைகளின் கூட்டத்தின் முன் தான் மட்டும் நின்று பேசுவது தனக்குத்தான் அபாயம் என்று நினைத்தது. அதனால் பக்கத்திலிருந்த ஒரு பாறையின் மீது ஏறி நின்று கொண்டு யானைகளைப் பார்த்து உரத்த குரலில் அழுதுகொண்டே ‘‘நான் கூறுவதைக் கேளுங்கள்’’ என்றது.

யானைகளின் தலைவன் ‘‘நீ யார்’’ என்றது. ‘‘நான் தூதுவன்’’ என்றது முயல்.

‘‘நீ யாருடைய தூதன்’’ எனத் தலைவன் யானை அரசு கேட்டது.

அதற்கு முயல் ‘‘நான் வானத்தில் பிரகாசிக்கும் சந்திரனின் தூதுவன்’’ என்றது.

அதைக் கேட்ட யானை அரசு, ‘‘சந்திரனிடமிருந்து செய்தி கொண்டு வந்துள்ளீரா?’’ என்று கேட்டது.

அதற்கு முயல் ‘‘ஆம் அரசே! ஆனால், நீங்கள் என்மீது கோபம் கொள்ளக்கூடாது. தூதுவனுக்குத் தண்டனை அளிப்பது தவறு. அவன் கடமையைத்தான் செய்கிறான் என நினைக்க வேண்டும்’’ என்றது.

உடனே யானை அரசன் ‘‘உனக்கு ஒரு தீங்கும் செய்ய மாட்டேன். வந்த காரியம் என்னவென்று சொல்’’ என்றது.

அப்போது முயல் யானையிடம் ‘‘நீங்கள் அனைவரும் ஏரியில் தண்ணீர் குடிக்கும் போது அதன் தூய்மை கெட்டுவிடுகிறது என்று சந்திரன் எண்ணுகிறார். அநேக நூற்றுக்கணக்கான முயல்கள் இறந்து விடுகின்றன என்றும் கூறுகிறார். மேலும் முயல்களின் அரசன் சந்திரனின் நேரடிப் பாதுகாப்பில் வசித்து வருவது அனைவரும் அறிந்த ஒன்றாகும். அப்படி இருக்கும்போது எங்கள் இனத்திற்கு நீங்கள் தரும் துன்பத்தைப் பொறுத்துக்கொள்ள அவர் தயாராக இல்லை.

அதனால், இனிமேலாவது எங்களைக் கொல்லாமல் இருக்க வேண்டுமென்றும், அப்படிக் கொன்றால் விபரீத விளைவுகள் ஏற்படும் என்றும் கூறினார் என்று தந்திரமாகக் கூறியது.

முயல் கூறியதைக் கேட்ட யானை அரசன் அதிர்ச்சி அடைந்து ''இது உண்மையாகவும் இருக்கலாம், இனிமேல் இதுபோன்ற துன்பம் உங்களுக்கு நேராமல் நான் கவனித்துக்கொள்கிறேன். நான் சந்திரனிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும்'' என்றது.

உடனே முயல் ''என்னுடன் வாருங்கள்'' என யானை அரசனை அழைத்துக்கொண்டு ஏரிக்குச் சென்றது.

அங்கு ஏரியின் தெளிந்த நீரில் பிரதிபலித்துக் கொண்டிருந்த சந்திரனைக் காட்டி ''இப்போது அவரிடம் மன்னிப்புக் கேளுங்கள்''என்றது.

யானை அரசனும் சந்திரனிடம் பேசத் தனது துதிக்கையைத் தண்ணீரில் நனைத்தது.

தெளிந்த நீரில் காணப்பட்ட சந்திரனின் உருவமோ ஒன்று இரண்டாகவும், இரண்டு நான்காகவும் தோன்றலாயிற்று.

## அரும்பதங்கள்

| | | |
|---|---|---|
| **பருவ மழை** | - | பருவக் காற்றினால் பெய்யும் மழை |
| **விரைவில்** | - | சீக்கிரம், வேகம் |
| **களைய** | - | நீக்க, அகற்ற |
| **பிரகாசிக்கும்** | - | ஒளிவீசும் |
| **விபரீத விளைவுகள்** | - | பயங்கர விளைவுகள் |
| **தூய்மை** | - | சுத்தம் |

## கிரகித்தற் பயிற்சி

### பூரண வாக்கியங்களில் விடை தாருங்கள்

1. யானைகள் எங்கே வாழ்ந்தன ?
2. தலைவன் யானையின் தோற்றம் பற்றிக் கூறுங்கள்.
3. பறவைகளும், மிருகங்களும் ஏன் தாகத்தால் மடிந்தன ?
4. முயல் தன்னை யாரென யானைக்கு அறிமுகஞ் செய்து கொண்டது ?
5. யானை ஏரியின் தெளிந்த நீரில் யாரைக் கண்டது ?

## சொல்வளம்

### ஒத்த கருத்துச் சொற்கள்

- ✯ காடு - வனம், கானகம்
- ✯ ஆறு - நதி, கங்கை
- ✯ மிருகம் - விலங்கு
- ✯ பறவை - புள், பட்சி
- ✯ ஏரி - வாவி, குளம்
- ✯ கேளுங்கள் - செவிமடுங்கள்
- ✯ வானம் - ஆகாயம், விண்
- ✯ கோபம் - சீற்றம், வெகுளி

### எதிர்க் கருத்துச் சொற்கள்

- ✯ காடு - நாடு
- ✯ எளியார் - வலியார்
- ✯ துன்பம் - இன்பம்
- ✯ அழகு - அவலட்சணம்
- ✯ ஏறி - இறங்கி
- ✯ இரவு - பகல்

## செயற்பாடு

1. ஆசிரியர் கூறும் கதையைக் கேளுங்கள்.
2. இக் கதையைச் சுருக்கிக் கூறுங்கள்.
3. இக்கதை மூலம் நீங்கள் பெற்றுக் கொண்ட செய்திகள் என்னவென்று எழுதுங்கள்.
4. கதையை உச்சரித்து, தொனி வேறுபாடுகளை அனுசரித்து உரத்து வாசியுங்கள்.
5. மௌனமாக வாசித்து அரும்பதங்களைக் குறித்துக் கொள்ளுங்கள்.

### பின்வரும் சொற்களை வைத்து வாக்கியம் அமையுங்கள்.

1. காடு - ............................................
2. பறவை - ............................................
3. ஏரி - ............................................
4. தூதுவன் - ............................................
5. சந்திரன் - ............................................

### சொற்களைச் சேர்த்து எழுதுதலும் பிரித்து எழுதுதலும்.

இரு சொற்கள் ஒன்றுபடச் சேர்த்து எழுதப்படலாம்.
அது போலச் சேர்த்து எழுதிய இரு சொற்களைப் பிரிக்கவும் முடியும்.

உதாரணம் : காட்டையடைந்து, வழியனுப்பி
காட்டை + அடைந்து - காட்டையடைந்து
வழி + அனுப்பி - வழியனுப்பி

## செயற்பாடு

### பின்வரும் சொற்களைப் பிரித்து எழுதுங்கள்

1. வேண்டுமென - ............................................
2. இருக்குமிடத்தை - ............................................
3. என்னவென்று - ............................................
4. வழியனுப்பி - ............................................
5. பக்கத்திலிருந்த - ............................................

## சேர்த்து எழுதுக.

1. தண்ணீர் இன்றி - ............................................
2. தேடி அலைந்தன - ............................................
3. காட்டை அடைந்த - ............................................
4. தண்டனை அளிப்பது - ............................................
5. அதிர்ச்சி அடைந்து - ............................................

## வேற்றுமை

பெயர்ச் சொல்லின் பொருளை வேறுபடுத்துவது வேற்றுமை. பின்வரும் அட்டவணையைப் பாருங்கள்.

### எட்டு வேற்றுமை உருபுகளும் பொருள்களும்

| வேற்றுமை | உருபு | சொல்லுருபு | பொருள் | உதாரணம் |
|---|---|---|---|---|
| முதல் வேற்றுமை | ——— | | எழுவாய் | பத்மா வந்தாள்.<br>வந்தான் |
| இரண்டாம் வேற்றுமை | ஐ | - | செயப்படு<br>பொருள் | ரமணி வீட்டைக்<br>கட்டினாள் |
| மூன்றாம் வேற்றுமை | ஆல், ஓடு | உடன்<br>கொண்டு | கருவி<br>கருத்தா<br>உடனிகழ்ச்சி | மேசை மரத்தால்<br>செய்யப்பட்டது<br>பென்சிலால்<br>சித்திரம்<br>வரையப்பட்டது.<br>தந்தையோடு மகள்<br>சென்றாள் |
| நான்காம் வேற்றுமை | கு | பொருட்டு<br>நிமித்தம்<br>ஆக | கொடை<br>நட்பு<br>பகை<br>உறவு<br>தகுதி<br>முதற் காரணகாரியம்<br>நிமித்த காரணகாரியம் | ரவீந்திரனுக்கு<br>நண்பன்<br>சாணக்கியன்<br>சுஜாதா ஏழைக்கு<br>உணவு<br>கொடுத்தாள். |

## செயற்பாடு

**பின்வரும் வாக்கியங்களை வாசித்து அவை ஒவ்வொன்றினதும் வேற்றுமையைப் பொருத்துங்கள்.**

| | |
|---|---|
| 1. சுஜாதா வந்தாள். | இரண்டாம் வேற்றுமை |
| 2. குமாரி நீலாவுக்கு வளையல் கொடுத்தாள். | முதலாம் வேற்றுமை |
| 3. கட்டில் மரத்தால் செய்யப்பட்டது. | நான்காம் வேற்றுமை |
| 4. நான் முதற் பரிசைப் பெற்றேன். | மூன்றாம் வேற்றுமை |
| 5. சியாமளாவுக்கு அக்கா அசோகமாலா. | நான்காம் வேற்றுமை |

## சென்றடைய வேண்டிய இடத்திற்கு ஒருவரை ஆற்றுப்படுத்தல் (வழிகாட்டுதல்)

**எப்படிப் போக வேண்டும் ?**

முதியவர் : கோவில் வீதி எங்கே இருக்கின்றது ? தயவு செய்து சொல்ல முடியுமா?

கீதா : அதோ, தெரிகிறதே. அதுதான் எங்கள் பாடசாலை. அதற்கு எதிரே பெரிய வீதி ஒன்று தெரிகிறதல்லவா ? அதுதான் காலி வீதி. காலிவீதியிலிருந்து இடது கைப் பக்கம் திரும்ப வேண்டும். திரும்பியதும் ஒரு கோவில் வரும். அந்தக் கோவிலின் அருகே உள்ளதுதான் கோவில் வீதி.

முதியவர் : மிக்க நன்றி. இனி எளிதாகக் கோவில் வீதிக்குச் சென்றுவிடலாம்.



## செயற்பாடு

வெளியூரிலிருந்து உங்கள் நண்பர் உங்கள் ஊருக்கு வந்துள்ளார். அவருக்கு உங்கள் பாடசாலைக்கு எவ்வாறு போக வேண்டும் என வழிகாட்டுங்கள்.

### பழமொழிகள்

- ✯ மின்னுவது எல்லாம் பொன்னல்ல.
- ✯ அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு.
- ✯ ஆற்றிலே போட்டாலும் அளந்து போடு.
- ✯ இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சை.
- ✯ உப்பிட்டவரை உள்ளவும் நினை.
- ✯ ஊரோடு ஒத்து வாழ்.
- ✯ ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது.
- ✯ கடவுளை நம்பினோர் கைவிடப்படார்.
- ✯ காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு.
- ✯ காற்றுள்ள போதே தூற்றிக்கொள்.
- ✯ தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்.
- ✯ ஆறின கஞ்சி பழங்கஞ்சி.
- ✯ உப்பில்லாப் பண்டம் குப்பையிலே.
- ✯ பேராசை பெரும் நட்டம்.
- ✯ மனம் உண்டானால் இடம் உண்டு.

## செயற்பாடு

**பின்வரும் பழமொழிகளில் விடப்பட்டுள்ள இடைவெளிகளைப் பூர்த்தி செய்யுங்கள்.**

1. ............................... சுடுகாடு மட்டும்.
2. ஏட்டுச் சுரைக்காய் .......................................
3. ஊரோடு ........................................
4. ......................................... அளந்து போடு.
5. அடம்பன் கொடியும் ...........................................

உமது தெரிந்த ஐந்து பழமொழிகளையும் அவற்றின் பொருள்களையும் தருக.